ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராயநம:

ஆர்ய தர்மம்.

यावत् पवनो निवसति देहे तावत् पृच्छति कुशलं गेहे ।
गतवति वायौ देहापाये भार्या बिभ्यति तस्मिन् काये ॥

देहे - சரீரத்தில், **पवनः** - பிராணவாயுவானவன், **यावत्** எவ்வளவுகாலபர்யந்தம், **निवसति** - வஸிக்கிறதோ, **तावत्** - அது வரையில், **गेहे** - வீட்டில் வஸிக்கும் ஜனமானது, **कुशलं** - க்ஷேம த்தை, **पृच्छति** - வினவுகின்றது, **वायौ** - பிராணவாயுவானது, **गतवति** - இச்சரீரத்திலிருந்து வெளிக்கிளம்பிவிட்டால், **देहापाये** - தேகத்திற்கும் அபாயம் நேருங்கால், **तस्मिन् काये** - அபாயத்தை அடைந்த நிலைமையிலிருக்கும் அந்த சரீரத்தினிடத்தில், **भार्याः** - பத்நிகளாயிருப்பவர்களும, **बिभ्यति** - பயத்தையடைகிறார்கள்.

முன் சுலோகத்தால் பொதுவாய்கூறி இதனால் லோகரீதி யாயும் சாஸ்திரரீதியாயும் சகல ஸுகதுக்கங்களுக்கும் பாத்திய பட்டவள் என்று சொல்லப்படும் பார்யைகூட இச்சரீரத்தைக் கண்டு பயப்படுகிறாள் என்று அறிவிக்கிறார்.

நீ எவ்வளவுகாலம் ஜீவித்திருந்து பொருளை ஸம்பாதனம் செய்கிறாயோ. அதுவரையில் உன் கிரகத்திலிருக்கும் பத்நீ முதலானவர் உன் க்ஷேமத்தைப்பற்றி விசாரிப்பார், உன் சரீரத் திலிருந்து பிராணவாயு கிளம்பிவிட்டால் அந்த சரீரத்தினிடத்தில் வெகுகாலமாய் அபிமானித்துவந்த பார்யையும் பயந்து நடுங்கு கிறாள். இக்கருத்தைத்தான்

मृतं शरीरमुत्सृज्य काष्ठलोष्टसमं भुवि । विमुखाबान्धवायान्ति

மரித்த சரீரத்தை உபயோகமற்ற கல்லுக் கட்டைகளைப்போல் தூரத்தில் எறிந்துவிட்டு பந்துஜனங்கள் திரும்பிப் பாராமல் போய்விடுகிறார்களென்று ஸ்மிருதியிலும் வெளியிட்டிருக்கிறார். ஆகையால் இச்சரீரத்தில் நமக்கிருக்குமபிமானத்தையும் மற்றும் பத்நீ முதலியவர்களிடம் இருக்கும் அபிமானத்தையும் விட்டு திடமான வைராக்கியத்தைப் பெற்று பரலோகத்திற்குவேண்டிய ஸாதனங்களைத் தேடவேண்டும். (8)

உபபத்திராதிபர்.

ஆர்யதர்மம்.
க்ஷய-ஹூ ஆடி-மீ ௭-௨

வேதாந்த ஸித்தாந்தம்.

இப்பூமண்டலத்தில் வேதங்களென்பன உண்மையைவிளக்கும் நூல்களென்பதை ஆஸ்திகர்களான எல்லா மதஸ்தர்களும் ஒப்பியிருக்கின்றார்கள். அவ்வேதங்கள் தமிழ்ப்பாஷையிலுள்ளனவென்று சிலரும், பார்சிபாஷையிலுள்ளனவென்று சிலரும், மேற்றிசையார் பாஷையாகிய ஹீப்ரு, கிரீக் முதலிய பாஷைகளிலுள்ளனவென்று வேறு சிலரும் இப்படிப் பலவிதமாகச் சொல்வார்கள். அவரவர் தத்தம் மதங்களின் வேதங்களே பரமனாலருளப்பட்டனவென்று தாபிக்குமாறு பற்பல முயற்சிகளைச் செய்துவருவதுடன் அதற்குச் சிற்சில பிரமாணங்களையுங் காட்டிவருவார்கள். ஆயினும், எவரும் நிஷ்பக்ஷபாதமாய் ஆராய்வாராயின் ஸம்ஸ்கிருத பாஷையே பாஷைகளில் முதன்மைபெற்றதென்று மிகுதியாயிருப்பதால் அதிலுள்ள வேதமே, இவற்றுள் முதன்மைபெற்று அநாதியாய் அமைவதிற் சிறிதும் தடையின்றாமென்க. அவ்வேதங்கள் இருக்காதியவென்பதும் எல்லோருமறிந்ததேயாம். அவ்வேதங்களின் பொருளை வெளியிடுதற்கு விரும்பிய நாம் அவ்வேதமுடிவான உபநிஷத்துக்களின் உண்மையை விளக்கும் பிரமசூத்திரம், பகவற்கீதை முதலாகிய பற்பல கிரந்தங்களைத் துணையாகக்கொண்டு, எமது சிற்றறிவிற்கெட்டியபடி பலருக்குமானந்தமுண்டாக்கமுயலுவோம்.

இவ்வண்ணம் முயல்வது பிறர் பரிகசித்திடத்தக்க பல குற்றங்களை விளைவிக்குமேனும், குற்றத்தைநீக்கிக் குணத்தைக்கொள்ளும் உத்தமசிலரான வித்துவான்கள் இதைக் கனப்படுத்துவார்களென்றே நம்புகின்றோம்.

இவ்விஷயத்தில் உபநிடதங்களின் உண்மைப் பொருள்களை அவ்வவர் மதங்களுக்கேற்ப விளக்கிப் பெரும்புகழெய்தித் தமது

சித்தாந்தத்தை யாவரும் அனுஷ்டித்திடச் செய்தவர்கள் மூவரே. அவரே துவைதிகள், விசிஷ்டாத்வைதிகள், அத்வைதிகள் எனப் படுவார்கள். அவர் சித்தாந்தங்களுள் துவைத, விசிஷ்டாத்வைத சித்தாந்தங்களைப்பற்றி யாம் இங்கு எழுதவில்லை. இம்மூன்று சித்தாந்தங்களுள் அத்வைத சித்தாந்தமே முக்கியமாதலால் அதனையே முதற்கண் விசாரித்திடுவோம். அங்ஙன்மே இப்பாத கண்டத்தில் இவ்வத்வைதமதத்தை வெளியிடும் ஆசிரியர்கள் எவ் வெவ்விதமாக எவ்வெவ்விடங்களில் எவ்வெவ்வுண்மைகளையும் அவற்றின் காரணங்களையும் வெளியிடுவார்களோ அவ்வவ்விடங் களில் அவ்வவ்வுண்மைகளையும் அவ்வவற்றின் காரணங்களையும் வெளியிடுவாம்.

1. இச்சகத்திற்குக் காரணம் சகுணத்தாற் குறிக்கப்பட்ட நிர்க்குணமாய பரப்பிரமமே. சாங்கியநூலார் முதலாயினோர் குறித்தபடி பிரதானம் என்றும் பொருள் முதலியனவன்று. என் னெனில், அவை அறிவில்லாப் பொருளானமையாலும், வேதங்க ளுள் 'உலகத்தைச் சிருஷ்டிக்கக் கருதினன்' என்று தொடங்கிப் பலவிடங்களில் அறிவின்தொழில் சொல்லப்படுகிறபடியாலும் அறிவற்ற இவை காரணப்பொருளாவது ஒருபொழுதும் பொருந் தாது என்க. அணுக்களே உலகத்திற்குக் காரணமென்பதை உலகியல்புணர்ந்து உண்மையைக்கவர்ந்து உள்ளங்களித்த உயர்ந் தோர் ஒருபொழுதும் ஒப்பார். இவ்வுலகில் குடம், சட்டி முத லாயின எவ்வாறு மண்ணின்கண்ணுள்ளனவோ, கைவளை கிரீடம் முதலிய ஆபரணங்கள் தங்கத்தின் திரிபோ அவ்வாறு 'தான்' என் றும், 'தனது' என்றும்உள்ள இருவகைப்பற்றிற்குமிடமான இவ் வுலகம் பரப்பிரம்மத்திற்றோன்றியதே. ஆதலின் (எழுவாய்) காரியமாய குடமுதலாயினவும், காரணமாய பொன் முதலாயின வும், அவற்றிற்றோன்றிய ஏனையவுருவங்களும்போலப் பிரமத்தின் வேறாயதன்றாம். அதுபற்றியே "எல்லாம் உண்மை ஆன்மா வாக நோக்கில்" என்று வேதம் கூறுவதென்றுணர்க. "உள்ளது போகாது இல்லது வாராது" என்னும் ஒரு நியாயமும் நிலைபெற் றதென்க.

2. மேலும், இப்பியில் வெள்ளியும், கயிற்றிற் பாம்பும், மாத்திற்றிருட்டனும், மலடியின் மகனும், முயலின் கோம்பும்போல்

இச்சகமானது பாப்பிர்மப்பொருளிலே தோன்றியதன்றிப் பிறி தன்ருகும். தோற்றன்மாத்திரமான பொருளுக்கு அத்தோன்ற லினிடமாயவதிட்டானத்தின் சத்தையிலும் வேருய் ஒன்றுகிடைத்தலரிதாதலால், தோன்றும் பொருள் எக்காலத்துமிலதேயாம், பற்பல பிரமாணுநுஸந்தானத்தால் காரியங்களெல்லாம் காரணரூபமாய்த் தோன்றும் பிரமஞானிக்கு இவ்வுலகம் அங்கியிலிட்ட வஸ்திரம்போல ஆகாரமாத்திரந்தோற்றினும் உலகம் அசத்தேயாவது திண்ணமாம்.

3. மேலும், சாக்கிரம் சொப்பனம் என்னுமிரண்டுவித அவஸ்தைகளேயுங்கடந்து மூன்ருமவஸ்தையிற்ருேன்றுவதும், ஸம்பிரசாதமென்று வேதங்களில் வழங்கப்படுவதும் அத்துவிதமாகிய பிர்மமே. அதனையே பாமென்றும், ஜோதியென்றும். ஆகாயமென்றும் பலவிடங்களிற் சொல்வதாம். "எவ்விடம் யாதுங்கண்டிலன் யாதுங்கேட்டிலன்" என்று தொடங்கிய பல வேதவசனங்களாற் பிறிதொன்றில்லையென விளங்குதலாலும் "தினமும் பிரமத்தையடைவார்" என்று ஒவ்வொருதினமும் பிரமத்தையடைவதாக வேதங்களிலிருத்தலாலும் ஒவ்வோருயிரும் எப்பொழுதும் சுழுத்தியிற் பிர்மத்தையடைவதாய்ச் சொல்லவேண்டியதாயிற்று. இதற்குப் பிரமாணங்கள் 'பிரகதாரண்ணியோபநிடதம், அஜாதசத்ருபிராமணம்' என்பனவே. அதுகொண்டு சுழுத்தியிற் பிரமநிலை வெளியாயிற்றெனக.

(தொடரும்)

உபபத்திராதியர்.

ஹிந்து ஆலயங்களைப் பரிபாலித்துவரும் கமிட்டிகள் தர்மகர்த்தாக்கள், மானேஜர்கள் முதலியவர்களுக்கு

ஓர் விக்ஞாபனம்.

தேவாலயங்களில் தரிசனர்த்தம் செல்கிறவர்களுக்கு ஸ்வயமாகவே பக்தியும் மனச்சமாதானமும் உற்சாகமும் உண்டாக வேண்டியதவசியமன்ருே? ஆனல் பிரகிருதத்தில் பொதுவாக அப்படிக்கு இருப்பதாக இல்லையென்றே சொல்லவேண்டியிருக்கிறது. அதற்கு முக்கிய காரணங்கள் சில உள. அவையாவன:—

1. அபிஷேக தீர்த்தத்தை அப்போதைக்கப்போது அப்புறப்படுத்தாமல் தங்கி நிற்கச்செய்து அதனால் துர்கந்தம்உண்டாகவிட்டிருப்பது.

2. தினசரி காலையிலும் மாலையிலும் சரியானபடி குப்பை செத்தைகளைக் கூட்டித்தள்ளாமல் விட்டிருப்பது. புஷ்கரணி சுத்தமாயில்லாமல் இருப்பது.

3. அர்ச்சனை, அபிஷேகம், தீர்த்தம் முதலிய பிரசாதவிஷயமாக தரிசனத்துக்குச் செல்லுகிறவர்களுக்கும் கோவில்சிப்பந்திகளுக்கும் வாக்குவாதங்கள் நேரிடுவதும் வம்புப்பேச்சுகளுக்கு இடங்கொடுப்பதும்

4 தரிசனத்துக்குச் செல்லுகிறவர்கள் பிரசாதங்களைச்சாப்பிட்டுவிட்டு கோவிலுக்குள்ளேயே நிலை, சுவர், தூண் முதலிய இடங்களில் கையைத் துடைப்பது; அலக்ஷியமாக அசுத்தங்களைப்போட்டுவைப்பது; ஆபாசம் செய்வது முதலியன.

1, 2-வது அயிட்டங்களின் விஷயத்தில் சம்பந்தப்பட்ட சிப்பந்திகளுக்குக் கண்டிப்பாய் உத்திரவு செய்வதுடன் அதன்படி நடக்கிறார்களோ என்று கவனித்துப் பார்த்துவந்தால் மேற்கண்ட குறைகள் நிவர்த்தியாகிவிடும்.

3, 4-வது விஷயமாக அடியிற்கண்டபடி ஒரு நோட்டீஸ் தேவாலயங்களில் யாவருக்கும் தெரியும்படியாக பஹிரங்கமான இடங்களில் ஒட்டி வைத்து அதன்படி நடக்கிறதாவென்று தகுந்த உத்தியோகஸ்தர்களைக்கொண்டு ஜாக்கிரதையாகப் பார்த்துவந்தால் மேற்கண்ட குறைகள் நாளடைவில் நீங்கிவிடும். ஆகையால் அவ்விதமே செய்யக்கோருகிறேன்.

விளம்பரம்.

தேவாலயங்களுக்குள் செல்கிறவர்கள் கவனிக்கவேண்டிய விஷயங்கள் :—

1. தேவாலயமானது ஈச்வரனின் இருப்பிடம்.

2. அதற்குள் செல்கிறவர்கள் கோபுரவாசலிலேயே உலக சம்பந்தமான எண்ணங்களை மனதிலிருந்து அகற்றிவிட்டு தெய்வ சம்பந்தமான ஸ்தோத்ரம், நாமாவளி இவைகளை உச்சரித்துக் கொண்டு செல்லவேண்டும்.

3. அர்த்தமண்டபம் செல்லுமுன் புஷ்கரிணியில் கால்கைகளைக் கழுவி சுத்தம் செய்துகொண்டு செல்லவேண்டும்.

4. கோவிலுக்குள் இருக்கையில் எவ்விதமான வம்புப்பேச்சுமில்லாமல் மௌனமாகவிருப்பது நல்லது.

5. அர்ச்சனை செய்யவேண்டியிருந்தால் அதற்காகக்கொண்டுபோயிருக்கும் சாமான்களை பயபக்தியுடன் அர்ச்சகரிடம் கொடுத்து சச்சரவில்லாமல் காரியங்களை முடித்துக்கொள்ளவேண்டும்.

6. பிரசாத வினியோகம், அர்ச்சனை, தக்ஷிணை, இவைகள் விஷயத்தில் மனஸ்தாபத்திற்கு இடமுண்டாகும்போலிருந்தால் அவைகளை கோவிலுக்குள் காட்டாமல் வெளியில் போய்த்தான் பேசிக்கொள்ளவேண்டும். எவ்வித காரணத்தை முன்னிட்டும் கோவிலுக்குள் அர்ச்சகர் முதலிய கோவில் சிப்பந்திகளாவது தரிசனம் செய்பவர்களாவது கோபதாபங்களைக் காட்டக்கூடாது. இவைகளெல்லாம் முற்றிலும் தவிர்க்கப்படவேண்டும். ராஜ ஸந்நிதி, ஆசாரியஸ்வாமிகள் சந்நிதி இவ்விடங்களுக்குச் செல்கையில் எவ்வளவு பயபக்தியோடு நடக்கிறோமோ அதைவிடப்பதின் மடங்கதிகமான வணக்கத்தைத் தெய்வஸன்னிதியில் அனுஷ்டிக்க வேண்டும். இப்படி தேவாலயங்களுக்குள் நிகழுமானால் மேற்படி ஆலயங்களுக்குச் செல்கிறவர்களுக்கு பக்தியும், சாந்தமும் உண்டாகும். கோவில்களில் யாதொருவிதமான அசுத்தமும் ஆபாசமும் செய்யக்கூடாது. உதாரணமாக பிரசாதங்களை உண்டபின் கையைத் தூணிலும் சுவற்றிலும் படுதா முதலியவிடங்களிலும் துடைப்பது, வாழைப்பழத்தோல்களையும், தேங்காய் மட்டையையும் அங்கே போடுவது எச்சில் துப்புவது, மூக்குச்சிந்துவது முதலிய காரியங்கள் செய்யவே கூடாது.

தேவாலயங்களில் குப்பை செத்தை போடுகிறவர்களும், சச்சரவு செய்கிறவர்களும் கிரிமினல் தாப்பில் பிராசிக்யூஷனுக்கு உள்ளாவார்கள்.

புதுக்கோட்டை சமஸ்தானம்
திருமயம்.

K. S. இராமச்சந்திரய்யர்,
பென்ஷன் தாசில்தார். (பிரிட்டிஷ்)

ஸ்ரீ திரிபுரசுந்தரீ ஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

குடும்பதர்மம்.

ஆரியர்களே! சற்று செவிகளைச் சாற்றுங்கள். உலகத்திலுள்ள ஜீவராசிகளோ அளவற்றன. அவற்றுள் சிறந்தது மானிடப்பிறப்பு. அதிலும் சிறந்தது பிராமணஜாதி. எல்லா மானிடர்களும் ஒரேவிதமாக இருப்பவரல்லர். கல்வி, மதம, நாகரீகம் முதலிய விஷயங்களில் ஒவ்வொரு ஜாதியாரும் ஒவ்வொரு விதமாக இருக்கிறார்கள். ஒருதாயின் வயிற்றில் பிறந்த பிள்ளைகள் எல்லோரும் ஒரேமாதிரியாக இருக்கிறார்களா? அப்படிப் போலவே சிலதேசத்தார்கள் தங்களுடைய ஊக்கத்தாலும் புத்தி விசாலத்தாலும் கல்வி கைத்தொழில் இவைகளில் மேன்மையடைந்து விளங்குகிறார்கள்.

சிலர் ஆடுமாடுகளை மேய்த்தலை ஜீவனோபாயமாகக் கொள்ளாமல் காடு முதலியவைகளை யழித்து வயல்களை உண்டாக்கிக் காலங்களில் அவற்றை நன்றாகப் பயிரிட்டுத் தங்களுக்கு வேண்டிய உணவு பொருள்களை வீடுகளில் சேர்த்து வைப்பதல்லாமல் அறிவின் பெருக்கத்திற்கு வேண்டிய வழிகளைத் தேடிக்கொண்டு தத்தம் இனத்தாரோடு சேர்ந்து வசிக்கிறார்கள். இவ்விதமான தொகுதிக் குடும்பமென்று பெயர். குடும்பத்திலுள்ளவர்கள் யாவரும் தங்கள் ஒரே முன்னோரிடமிருந்து வந்தவர்கள் என்றும் பலமான எண்ணங்கொண்டவர்களாக இருப்பதை நாம்காணுகிறோம்.

எதுவரையில் ஒரு குடிம்பத்திலுள்ள தாய், தந்தை, மக்கள் முதலான யாவரும் தத்தம் கடமைகளைச் செய்து ஒருவரையொருவர் தங்கள் குடும்பத்தின் பெருமையும் ஒழுக்கத்தையும் கவனித்து நடக்கிறார்களோ அதுவரையில் தான் அக்குடும்பம் க்ஷேமத்தை அடைந்துகொண்டுவரும்.

அவ்விதமே நாம் யார். நாம் யாருடைய உறவினர். நம்முடைய கடமை யாது. நாம் யாருடன் நேசித்தால் அவ்வொற்றுமை பெறலாம் என்பதைச் சற்று யோஜிக்க வேண்டும். நாம் தான் அக்ரஜன்மா என்னும் பதவியை எற்றுக்கொண்டவர்கள் நமக்கேற்பட்டது தான் 48-ஸம்ஸ்காரங்கள். நாம் தான் இந்திரி

யங்களை அடக்கி (ஜெபித்து) ஒவ்வொரு கர்மாக்களையும் விடாமல் அனுஷ்டிக்க வேண்டும்.

ஓர் அரசாங்கமென்றால் சத்துருக்கள் உண்டு என்பதுபோல் நமது யாக்கையாகிற அரசாங்கத்திற்கு இந்திரியங்களே பகைவராக இருக்கின்றன அச்சத்துருவை மனதாகிற அரசனால் வெகு சீக்கிரமாக வென்று விடலாம். ஒவ்வொருவரும் தத்தம் கடமைகளைச் செய்வது தத்தம் க்ஷேமத்திற்காகவே என்பதைத் தெரிவிக்கும் விநோதமான வரலாறு ஒன்று பெரியர்கள் கூறுவதுண்டு

அதாவது:— கால், கை, கண், காது, மூக்கு, வாய் என்னும் அவயவங்கள் எல்லாம் சேர்ந்து, "நாம் என் வயிற்றுக்காக பாடுபடவேண்டும் அஃது என்னவேலை செய்கிறது. நம்முடைய வேலைகளைச் செய்யாமல் அதனை அழித்து விடுவோம்" எனத்தீர்மானித்து ஒவ்வொன்றும் வழக்கமாகச் செய்கிற வேலையைச் செய்யாமல் சும்மா இருந்துவிட்டன. கைகள் ஒன்றையும்எடுப்பதில்லை என்றும் கால்கள் ஓரிடத்திற்கும் நடப்பதில்லை என்றும், கண்கள் ஒன்றையும் பார்ப்பதில்லை என்றும், செவிகள் ஒன்றையும் கேட்பதில்லை என்றும், மூக்கு வாஸனை அறிவதில்லை என்றும், வாய் ஒன்றையும் உட்கொள்ளுவதில்லை என்றும் சொல்லிக்கொண்டு ஒன்றையும் கவனியாமல் இருந்தன.

இவ்வாறு சில நாட்கள் சென்றபிறகு எல்லா அவயவங்களும் சோர்வடைந்து ஆகாரமில்லாததால் இறந்துபோகும் நிலைமையை அடைந்தன. அப்பொழுதுதான் தாம் செய்வது தவறு என நன்குணர்ந்து தம் கடமைகளைச் செய்யத்தொடங்கின.

இம்மாதிரியேதான் குடும்பத்திலுள்ள யாவரும் அவரவர்கள் கடமைகளை ஒழுங்காகச் செய்தால்தான் குடும்பம் க்ஷேமத்தை அடையும்.

இங்ஙனம் ஒழுங்காகச் செய்துவருகிறார்களா என்று கவனிப்பவர் யார்? தகப்பனார். அவரே குடும்பத்திலுள்ள புதல்வரைப்போதித்து நாம் இப்பாக்யத்தைப் பெற்றோம். "நமக்கேற்பட்டது இந்தந்த கர்மாக்கள். இந்தந்த கர்மாக்களைச் செய்தால் இம்மாதிரியான பலனை அடையலாம். நமது பெரியோர்கள் இம்மகிமைவாய்ந்தவர்கள். அவர்கள் வம்சத்திலுதித்து நாம் இவ்வளவு நாஸ்திகனாக ஆகலாகாது" என்று உபதேசித்து நல்ல வழி

யில் தற்பிக்கவேண்டியது. அசக்தனாக இருந்தால் நல்ல ஸத்குருவினிடம் அனுப்பி நல்ல சீலங்கள் படியும்படி செய்யவேண்டியது. அவரவர்களின் கடமை. இனி எல்லோரும் அவ்விதம் தவறாமல் அநுஷ்டிப்பார்களேயாகில் தத்காலம் நமது மதத்திற்கு ஏற்பட்டிருக்கும் குறை நீங்கி நாம் சுகமாக வாழலாம்.

பசித்தவர்களுக்கு அன்னமிடலும் யாசகருக்கு ஈதலும் தரித்திரர்களுடைய வறுமைத் துன்பத்தை நீக்குதலும் வழிப்போக்கர்களுக்காக சத்திரங்கட்டுதலும் நோயாளிகளுடைய பிணியைத் தீர்க்க வைத்தியசாலைகளை ஸ்தாபித்தலும் சிறந்த தர்மங்கள் என்று கூறுகிறார்கள்.

ஆயினும் இவற்றுள் சிறந்த தர்மமொன்றுண்டு. அஃதாவது ஒவ்வொருவனும் குடும்பத்திற்பிறந்திருப்பதற்காக, அவனவன் செய்யவேண்டிய கடமையை இன்னதென்றுணர்ந்து அதனை ஒழுங்காகச் செய்தலாம். இதனையே குடும்பதர்மம் எனச்சொல்லப்படும். பிதாமாதாக்கள் மக்களுக்கு வேண்டியவற்றைக் கவனித்தலும் தந்தை தாயார்களாகிய இருமுது குருமார்களையும் தெய்வம்போல் பாவித்துத் தள்ளாதபருவத்தில் அவர்களைப் பாதுகாத்தலும், புருஷன் மனைவிக்கு ஆகவேண்டியதை செய்து கொடுத்தலும் மனைவி தன்கணவனைத்தெய்வமாகநினைத்து, அவன் குறிப்பறிந்து நடத்தலும், தமயன் தன் தம்பிகளை புத்திரர்போல மிக்க அன்புடன் பாராட்டலும், தம்பி தன் தமயனிடத்தில்பிதாவுக்குரிய மரியாதைகளை அளிப்பதும், சகோதரர்கள்யாவரும் மனமொற்று வாழ்தலும் குடும்பதர்மங்களாம். குடும்ப தர்மங்களை நடத்தி வருவது தத்தம் க்ஷேமத்திற்கே என்று ஒவ்வொருவரும் எண்ணவேண்டும்.

குடும்பத்தில் பெரியோர்கள் தனது குமாரர்களை ஸநாதன தர்மத்தில் பூர்ண நம்பிக்கை உண்டாகும்படி ஆர்யமத உபாக்கியானங்களின் மூலமாகவாவது உபதேசித்து அவ்வழியில் பழக்கவேண்டும். பிறகு குடும்பக் காரியங்களுக்குத் தக்கவாறு வேலைகளைச் செய்யலாம்.

ஆங்காங்கு கிராமங்களில் வீற்றிருக்கும் ஆஸ்திக சிகாமணிகளான கிருகஸ்தர்கள் தாமாவது தமதுஆசிரியரைக்கொண்டாவது தமது புதல்வர்களுக்கு நித்யகர்மாக்களையும் அதன் பொருள்களை

யும். எதற்காகச் செய்யவேண்டுமென்பதையும் தினம் ஒரு மணி யாவது போதிக்கவேண்டியது அவசியமாகும். இவ்விஷயங்களை அவர்களின் பெரியோர்கள் கவனித்தால் மட்டும் நிறைவேற லாம். நாம் நம் முன்னோர்களாயும் நமக்கு ஹிதத்தை கருது வோராயும் உள்ள நமது மகரிஷிகளால் வெளியிடப்பட்ட ஸ்மி ருதியின் நியமங்களை மீறி நடந்தால் வைத்தியர்களால் விதிக்கப் படும் பத்தியத்தை அனுஷ்டிக்காத சிக்காளிக்கு அனர்த்தம் எற் படுவதுபோல் அவர்களுக்கு நாகாதி கஷ்டங்கள் நிச்சயமாய் ஏற் படும் என்பதை உறுதியாய்க் கூறலாம். ஆகையால் இதை ஒவ் வொருவரும் மனதில் வைத்துக்கொண்டு முக்கியமாயுள்ள ஸ்நான ஸந்தியாவந்தனம் முதலிய சில நித்யகர்மாக்களையாவது விதிவழு வாது நடத்தவேண்டும். இவ்விதம் ஒவ்வொருவரும் செய்வார்க ளாகில் பிறவிப்பயனைப் பெற முக்கிய ஸாதனமாகும். நாமே ஆஸ்திக சிரோமணிகள். நாமே பரமசிவனின் உறவினர்கள். நமது கடமையே தான் 48-ஸம்ஸ்காரங்கள். நம்முடைய உறவி னர்கள்தான் ஸாதுக்கள். நாம் நமது சினேகிதர்களின் கருத் தை மீறி தாண்டாமலிருப்பது போல் நமது சினேகிதர்களான சாதுக்கள் வார்த்தையை மீருமல் அவர்களால் விதிக்கப்பட்ட ஸம்ஸ்காரங்களை விடாது நடத்தியும் பிறவிப்பயனைத் தேடவிரு ம்பவும் வேண்டும்.

சுபம்!

K. R. வைத்தியநாதசாஸ்திரிகள்.

பக்தியோகம்.

புருஷர்களினுல் விரும்பப்படுவது புருஷார்த்தமெனப்படும். தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் ஆகிய நான்கு புருஷார்த்தங் களில் மோக்ஷமே சிறந்ததாகையால் அதைப் பெறவேண்டியே புத்திமான் முயலவேண்டும்.

अनित्यत्वात्स दुःखत्वाच्च धर्माद्याः परं सुखम् ।
मोक्ष एव परानन्दः संसारे परिवर्तताम् ॥

என்ற பாரத வசனத்தாலும், “ தர்மார்த்த காமங்களெல்லாம் சா சுவதமானவையல்ல. மோக்ஷம்தான் நித்தியமானது. ஆகை

யால் அதன் பொருட்டு புத்திமானான புருஷன் பிரயத்தனம் செய்யவேண்டும்” என்ற பால்லவேய சுருதியினாலும் மோக்ஷமே சிறந்த புருஷார்த்தமாகும். அதை எப்படி நாம் பெறுவது? பகவானிடம் பக்தியைச் செய்து வந்தால்தான் அடையலாம்.

பக்தியின் ஸ்வரூபம்:— நாம் நம்முடைய புத்திரன் முதலியோரிடம் செய்து வருகிற அன்புக்கு வாத்ஸல்யம் எனவும், சிநேகர்களிடம் செய்யும் அன்புக்கு ஸக்யம் எனவும், மனைவியிடம் செய்யும் அன்புக்கு அநுராகம் எனவும் பகவானிடம் படைக்கும் அன்புக்கு பக்தி எனவும் பெயர். இந்தப் பக்தியை ஸ்ரீமந்நியாய ஸுதா என்னும் நூலில்,

निरवधिकानन्तानवद्यकल्याणगुणत्वज्ञानपूर्वकः स्वात्मात्मीयसमस्तवस्तुभ्योऽनेकगुणाधिकः अन्तरायसहस्रेणाप्यप्रतिबद्धः निरन्तरप्रेमप्रवाहः भक्तिः ॥

“பகவானிடம் எல்லையற்றவையும் எண்ணிறந்தவையும் தோஷமற்றவையும் மங்களகரமுமான குணங்கள் உள்ளனவென்றும் நினைத்துத் தன் உயிரிடமும் தன்னைச் சார்ந்த வஸ்துக்களிலும் வைத்திருக்கும் ப்ரீதியைக்காட்டிலும் பன் மடங்கு அதிகமான பிரீதியை பகவானிடம் செய்து ஆயிரக்கணக்கான இடையூறுகள் வரினும் சளைக்காமல் எண்ணெயின் தாரையைப்போல் இடைவிடாது செய்யப்படும் விசுவாஸத்திற்குப் பக்தி எனப்பெயர்,” என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த அர்த்தத்தையே அடியிற் கண்ட சுலோகத்திலும் காண்க.

माहात्म्यज्ञानपूर्वस्तु सुदृढः सर्वतोऽधिकः ।
स्नेहो भक्तिरिति प्रोक्तो तया मुक्तिर्नचान्यथा ।
महित्वबुद्धिर्भक्तिस्तु स्नेहपूर्वाभिधीयते ॥

நிர்ணயம், பாத்மபுராணம்.

பக்தியை ஏன் செய்யவேண்டும்:— பக்தியைச் செய்யவேண்டியதே இல்லை. ஏனெனின் அதனால் யாதொருபயனுமில்லை. மோக்ஷம் என்ற ஓர் பலன் இருக்கிறதே என்றால், மோக்ஷம் எனின் நித்யமான ஞானனந்தாதி தேகத்துடன் கூடியிருப்பதென்று அர்த்தம் ஜீவர்களான நம்முடைய ஸ்வரூபமும் (தற்காலம்

அவித்யை முதலியவைகளால் மூடப்பட்டிருப்பினும்) நித்யஞா னனந்தமயமானதல்லவா! அது நம்மிடம் ஸித்தமாயேயிருக்க பக்தியை ஏன் செய்யவேண்டும்? இவ்வாறான ஓர் சங்கை உண் டாகலாம்.

பக்தியைச் செய்துவந்தால் மோக்ஷம் கிடைக்குமாதலாலும் நம்மிடம் அநாதி ஸித்தமான ஸாதிருச்யம் ஸித்தமாயிருப்பினும், பக்தியைச் செய்தால்தான் அவித்யா முதலியவைகளால் மூடப் பட்டது அபிவ்யக்தமாவதாகப் பாத்ம புராணத்தில்

तयैव व्यज्यते सम्यक् जीवरूपं सुखाधिकम् ।

என்று கூறப்பட்டிருப்பதாலும் பக்தி செய்யவேண்டும் என்ற விஷயமாய் சிறிது ஆராய்வோம்.

பிரஹ்லாதன் தைத்யபாலர்களுக்கு உபதேசிக்குங்கால் கூறு வதாவது,

नालं द्विजत्वं देवत्वं ऋषित्वं वाऽसुरात्मजाः ।
प्रीणनाय मुकुन्दस्य न वृत्तं न बहुज्ञता ॥
न दानं न तपो नेज्याः न शौचं न व्रतानि च ।
प्रीयतेऽमलया भक्त्या हरिरन्यद्विडम्बनम् ॥

"அஸுர புத்திரர்களே! பகவானைச் சந்தோஷிக்க பிறப்புக் காரணமாகாது. பிராமணனாயிருப்பதினாலேயும், தேவனாயிருப்ப தாலும் ரிஷியாயிருப்பதாலும் மோக்ஷம் தந்தருளும் பகவான் திருப்தியடையமாட்டார். இன்னும் ஸதாசாரத்தாலும், அனேக சாஸ்திரங்களைக் கற்றுணர்ந்த ஞானத்தாலும், தானம் செய்வதினு லும் தபஸ், விரதம் யாகம் முதலியவைகளினாலும் பகவான் ப்ரீதி யடையமாட்டார். ஆனால் நிர்மலமான பக்தியினால்தான் ஸந் தோஷப்படுகிறார்."

(தொடரும்.)

M. ராமராவ்,
காரியதரிசி

மாத்வ ஸபா,
கும்பகோணம்.

காஞ்சியில் யாத்திராவாசிகள் சர்வ தீர்த்தத்தைத் தரிசித்தும் ஸ்நானம் செய்தும் அவ்வப்பலன்களைப் பெற்றுவருகின்றனர்.

மகிமை.

தாம்பிரபர்ணிதீரத்தில் அகஸ்திய கோத்திரக்ஞனும் ஸாம வேதியனுமாகிய சோமன் என்னும் ஓர் வேதியன் மதங்க (சண்டாள) குலத்தாளான அழகிற்சிறந்த ஒரு பெண்ணை மோகத்தால் சங்கமம் செய்து ஒரு பிள்ளையைப் பெற்றனன். பின்னர் இவ் வேதியனால் பிதுர்தேவதைகளை உத்தேசித்துச் செய்யப்பட்ட சிராத்தாதிகள் அனைத்தும் கிருமிரூபமாகப்போயின. சுவர்க்கத்திலுள்ள பிதுர்தேவதைகள் நாகமடைந்தனர். இவைகளையெல்லாம் அந்தப் பிராமணன் அறிந்து மிக்க வருத்தமுற்று தீர்த்த யாத்திரை செய்யப்புறப்பட்டு அங்கங்குள்ள தீர்த்தங்களில் ஸ்நானம் செய்துகொண்டு முடிவில் உருத்திரசாலையையடைந்து சர்வ தீர்த்தத்தில் ஸ்நானம் செய்தமாத்திரத்தில் அந்தப் பிராமணனுடைய பிதுர்க்களனைவரும் இப்புண்ணிய விசேஷத்தால் கோரமான நரகத்தினின்றும் நீங்கிச் சுவர்க்கமடைந்தனர். பின்னர் இவனால் செய்யப்பட்ட சிராத்தாதிகளைப் பிதுர்க்கள் திருப்தியுடையவர்களாய் ஆகாரமாகக்கொண்டார்கள்.

ஒன்பதாவது அத்தியாயம் சர்வதீர்த்தப் பிரபாவம் முற்றிற்று.

உ

ஸ்ரீ காமாக்ஷி தேவ்யை நம:

பத்தாவது அத்தியாயம்.

விஷயசூசனை.

[இதில் ஸ்ரீ காமாக்ஷிதேவியினுடைய எல்லை, க்ஷேத்திராங்கி என்னும் துர்க்காலயம் முதல் சுவேதப் பெருமாள் ஆலயம் வரையில் ஆமென்பதும் அவ்வெல்லைக்குள் முக்கியமான துர்க்காலயம் ஆறு என்பதும்; விஷ்ணு வாலயம் நான்கு என்பதும்; சிவாலயம் ஐந்து என்பதும்; தீர்த்தம் நான்கு என்பதும்; அந்தக்காமாக்ஷிதேவியினுடைய ஆலயத்துக்குள் அன்னபூரணியாலயம் சாஸ்தாவாலயம், அஞ்சனகாமாக்ஷி சந்நிதி, சந்தானஸ்தம்பம் என்பன உளவென்பதும்; இவற்றின் வரலாறுகள் இத்தன்மயைென்பதும் விளக்கப்பட்டுள்ளன.]

காம கோட்டப் பிரபாவம்.

காஞ்சி க்ஷேத்திரத்தில் 'காமகோட்டம்' என்பது வாயு ஆக்னேயதிக்குகளில் திருவுருவங்கொண்டு விளங்கும் சிவவிஷ்ணுஸ்வரூபங்கள் தாமேயாகிய பராசக்திக்கு இருப்பிடமாயும், சர்வான்மாக்களுக்கும் சர்வகாமங்களைக் கோடி கோடியாகக் கொடுத்தருளும் ஆற்றலுடையதாயும் விளங்குதலால் அந்தக்ஷேத்திரம் காமகோட்டம் எனப் பெயர்பெற்றது.

இதற்குப் பெயர் ஐந்து.

அவையாவன.

1 ஸ்ரீபுரம், 2 பத்மநாபகம், 3 ஜீவன்முக்திபுரம். 4 காமகோட்டம், 5 காமகோட்டி.

இதன் எல்லை

சுவேதப்பெருமாளுக்கு 17 அம்சம் கிழக்கிலுள்ள
க்ஷேத்திராங்கிஆலயமே கிழக்கெல்லை

க்ஷேத்திராங்கி ஆலயத்துக்கு 15 அம்சம் தெற்கிலுள்ள
அஸ்திசிம்மாலயமே தெற்கெல்லை

அஸ்திசிம்மாலயத்துக்கு 15 அம்சம் மேற்கிலுள்ள
காயாரோகண ஆலயமே மேற்கெல்லை

காயாரோகணத்துக்கு 13 அம்சம்வடக்கிலுள்ள
சுவேதப்பெருமாளாலயமே வடக்கெல்லை

இந்நான்கு எல்லைக்கு உட்பட்ட பிரதேசம் பஞ்சபாணநிகேதம் எனவும், காமகோட்டம் எனவும் பெயர் பெறும். இது உருத்திரசாலைக்கும், விஷ்ணுசாலைக்கும் மத்தியிலுள்ளது.

இவ்விடத்தில் எவர்கள் இஷ்டதேவதாமந்திரங்களை ஜபிக்கின்றார்களோ அவர்கள் அந்தமந்திரங்களில் வரும் அக்ஷரம் ஒன்றுக்குக்கோடி பலனையும், முக்தியையும், எவர்கள் காமங்களை விரும்புகிறார்களோ அவர்கள் அக்காமங்களையும் கோடியாக அடைவார்கள்.

இவ்வெல்லைக்குள்—

முன்சொன்ன க்ஷேத்திராங்கிக்கு 30-அம்சம் தெற்கில்
* சங்குபாணிவிநாயகா 1

---

* இவர் உலகளந்தப் பெருமாள் கோயிலுக்குத் தெற்கிலுள்ளவர். சப்பாணிப்பிள்ளையார் என வழங்கம்படுவர்.

சங்குபாணிவிநாயகருக்கு 6-அம்சம் மேற்கில்
குமாரகோட்டப்பெருமாள் 2

வரலாறு.

தேவ சில்பியினல் காஞ்சிநகரத்தைப் பிரதிஷ்டை செய்ய ஆரம்பிக்கும் காலத்தில் வாஸ்துசாந்திசெய்து, சங்குப்பிரதிஷ்டை செய்யும் நிமித்தம் பூஜிக்கப்பட்டவர் 'சங்குபாணிவிநாயகர்.' பிரமதேவனைத் தாரகமந்திரம் வினவிச் சிறையிலடைத்துவிட்டுத் தாமே சிருஷ்டி செய்யும் கர்த்தராய் அக்கோலங்கொண்டவர் 'குமாரகோட்டப்பெருமானர்.

துர்க்கை ஆலயம் 6.

குமாரகோட்டத்துக்கு 24-அம்சம் தெற்கிலுள்ளவள்
* உக்கிரவாசினி 1

கருக்கினிலமர்ந்தவளுக்கு 10-அம்சம் வடக்குத் திக்கி
லுள்ளவள் தாந்தோனி 2

தாந்தோனிக்கு 5-அம்சம் வடக்குத் திக்கிலுள்ளவள்
§ பஞ்சசந்திகை 3

பஞ்சசந்திகைக்கு 5-அம்சம் வாயுதிக்கிலுள்ளவள்
தீர்த்தமாலினி 4

தீர்த்தமாலினிக்கு 20-அம்சம் வடக்குத்திக்கிலுள்ளவள்
|| ஹேமாசனை 5

பொன்னேரி அம்மைக்கு 21-அம்சம் தெற்கிலுள்ளவள்
‡ பீடவர்த்தினி 6

வரலாறு.

'உக்கிரவாசினி' பிரமனற் பூஜிக்கப்பட்டவள்; 'தாந்தோனி' சிவபெருமானைப் பூஜித்துத் தனுர்வித்தையில் மிகவும் பண்டிதை யானவள்; 'பஞ்சசந்திகை' தேவர்கள் தங்கட்கு நேர்ந்த விக்கி னங்களைப் போக்கிக்கொள்ளுவதற்குவேண்டிய பலிகளைக் கொடுக்

---

* கருக்கினிலமர்ந்தாள் என்றும், மதேவதை என்றும் வழங்கப்படுவள்,

§ கச்சபேச்வராலயத்திலுள்ளவள்.

|| பொன்னேரி அம்மை என வழங்குபவள்

‡ காளியம்மை என வழங்குபவள்.

கும்பொழுது அவைகளையேற்று, அவர்கட்கு வேண்டிய ஹிதங்களைச்செய்து 'ஹிதகாரிணி' எனப்பெயர் பெற்றவள்; 'தீர்த்தமாலினி' நிலை என்னும் ஸ்திரீ தனக்கு உண்டாகிய கர்ப்பத்தைக் காக்கப் பூஜிக்கப்பட்டவள்; 'ஹேமாசனை' கோரக்ஷசித்தரென்பவருக்கு விசேஷமான செல்வத்தைக்கொடுத்தவள்; 'பீடவர்த்தினி' திரிசிரனைச் சம்ஹரித்துக் காமகோட்டி பீடத்தைக் காத்தவள்.

விஷ்ணுவாலயம் 4.

முன்னே சொன்ன பீடவர்த்தினிக்கு 6 அம்சம் வடக்கில்
§ தூர்வாவர்ணப்பெருமாள். 1

தூர்வாவர்ணப்பெருமாளுக்கு 12 அம்சம் அக்கினியில்
¶ திரிவிக்கிரமப் பெருமாள் 2

உலகளந்தபெருமாளுக்கு 4 அம்சம் வாயுவில்
மதுப்பெருமாள் 3

மதுப்பெருமாளுக்கு 2 அம்சம் ஈசானத்தில்
காளாங்கபெருமாள் 4

வரலாறு.

'தூர்வாவர்ணப் பெருமாள்' மன்மதனாகிய புத்திரனைப் பெறுவதற்கு லக்ஷ்மீதேவியினால் பூஜிக்கப்பட்டவர்; திரிவிக்கிரமப்பெருமாள்', பூவுலகத்தைத் தாங்கும் வல்லமையைப் பெறுதற்கு ஆதிசேஷனால் பூஜிக்கப்பட்டவர்: 'மதுப்பெருமாள்' ஒருகாலத்தில் காஞ்சிமண்டலத்தில் தேன்மாரி பொழிவித்தவர்; 'காளாங்கப்பெருமாள் சந்தானவிருத்தியுண்டாக மஹாகாளர் என்னும் சிவபெருமானைப் பூஜித்தவர்.

சிவாலயம் 5.

முன்சொன்ன காளாங்கப்பெருமாளுக்கு 1 அம்சம்
சமீபத்தில் மஹாகாளராலயம் 1

மஹாகாளராலயத்துக்கு 35 அம்சம் ஈசானத்தில்
பட்டாரகேசுவராலயம். 2

---

§ பச்சைவண்ணப் பெருமாள்

¶ உலகளந்தப் பெருமாள் என வழங்குபவர்.